மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியினுடைய பணி ஆய்வில் இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினத்திற்கும் அதே போல் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூருக்கும் செல்கின்ற நெடுஞ்சாலைகள் நரிமணத்திலிருந்து அதிகமான எடையுள்ள வண்டிகளில் எண்ணெய் எடுத்துக் கொண்டு சென்னைக்கு வருவதன் காரணமாக, அதிகமாகப் பழுது ஏற்பட்டிருக்கின்றன. அந்த சாலைகளைப் பழுதுபார்க்க அதிகமாக நிதி ஒதுக்கித் தருவீர்களா என நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சாலைகள் பழுதுபட்டிருக்கின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகையினாலேதான், 60 கோடி ரூபாய் ஒப்புதலில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காடுகளை எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டு, மீதியை அரசு அதற்கு ஈடுகொடுத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடலாம் என்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த முயற்சியிலேயும் அரசு இறங்கி இருக்கிறது.

திருக் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*1906 திரு. வ. அன்பழகன்; மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செய்யாறு நகரில் அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, செய்யாறு நகரில், அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கோயிலில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அறநிலையத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறுநகரில், அருள்மிகுவேதபுரிஸ்வரர் திருக்கோயிலுக்கு கல்யாண மண்டபம் கட்டுகின்ற பணியை, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த காலத்திலே ஆரம்பித்தார்கள். அது முடியுந்தறுவாயில் கட்டிடம் திறப்

பத்ற்கு நாளும் குறிக்கப்பட்டு, அதற்கிடையிலே கழக அரசு கலைக்கப்பட்ட காரணத்தால், அது தடைபட்டுப் போயிற்று. அதற்குப் பிறகு, மீண்டும் ஆட்சி வந்ததற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மண்டபத்தைப் பார்வையிட்டார்கள். இப்போது கட்டுகின்ற பணியினை உடனடியாக ஆரம்பிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு காலத்திலே அது கட்டி முடிக்கப்படும் என்று தெரிந்து கொள்ள நான் விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது, முன்னாள் சட்டப் பேரவையினுடைய தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களுடைய முயற்சியிலே, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. பாதி வேலைகள் முடிந்து விட்டன. அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 12 ஆண்டுக் காலம் கட்டி முடிக்கப்படாத அந்தத் திருமண மண்டபம், அந்த நிலையிலேயே இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அது மேலும் கட்டி முடிக்கப்படுவதற்கு ரூ. 6 இலட்சம் செலவு ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வேலை ஒரு மாத காலத்திலே தொடங்கப்பட இருக்கிறது. 6 மாத காலத்திற்குள்ளே அந்த வேலை முடிக்கப்படுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கோவிலுக்கு நிரந்தரமாக வருமானம் வருகின்ற வகையிலே, அந்த மண்டபத்தோடு இணைந்த கடைகளைக் கட்டுகின்ற திட்டத்தை நீங்கள் நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தத் திட்டத்தில் இதுவும் சேர்ந்து இருக்கிறதா அல்லது சேர்க்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9.35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கடைகளையும் சேர்த்து கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள திட்டத்தில் அது சேர்க்கப் படவில்லை. மிகப்பெரிய கோவிலாக அது இருந்தாலும், அங்கே இரண்டு கால பூஜைக்கு கூட வருவாய் சரியாக இல்லாத நிலை இருக்கிறது, முதல் கட்டமாக இப்போது திருமண மண்டபத்தின் மூலமாக வருவாய் வரட்டும். இரண் டாவது கட்டமாக கடைகளைப் பற்றிச் சிந்திப்போம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம்.

* 5921 திரு. க. சொ. கணேசன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :